**ஜூன் – 27**

**"உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்." - 2கொரி 1 : 21, 22.**

கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருப்பதே, உண்மையான சீஷர்களின் முத்திரை அல்லது அடையாளமாகும். இந்த பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்துதல் மும்மடங்கானது. 1, பாடுகளாயிருந்தாலும் தேவனுக்காகவுள்ள காரியங்களில் உண்மைப்பற்றும் அவரிடத்தில் பிரதான அன்புடையவர்களாயிருத்தல்; 2, சகோதரருக்காக அன்பு அதாவது சுயநலமற்ற, உயர்ந்த, சுத்தமான அன்பு அவர்களுடைய சேமத்திற்காகவுள்ள ஆசை எப்பொழுதும் அவர்களுக்கு நன்மை செய்ய விழிப்புள்ளவர்களாயிருக்கும்; 3, உலகத்தாருக்காக உள்ள அனுதாபமுள்ள அன்பு, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நற்கிரியைகளைச் செய்யவும், எல்லா மனுஷரோடும் சமாதானத்துடன் வாழ ஆசையையும் தூண்டுகிறது. **- Z '96, 212 (R 2032).**

கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்கிற தேவனுடைய ஜனங்களை அவர் தொடர்ந்து ஒருவருக்கொருவர் பொருந்தச் செய்கிறார். அபிசேஷகத்தினாலே, அவர் தொடர்ந்து கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களைத் தங்களுடைய ஸ்தானங்களில் பலப்படுத்தி, அபிவிருத்தி செய்தார். இதுபோலவே அவர் தன்னுடைய எல்லா முன்னேற்பாடுகளிலும் அவர்களுடைய இருதயங்களைத் தன்னோடு அனுதாபமுள்ள ஐக்கியத்திலும், ஒத்துழைப்பிலும் கொண்டு வந்து, அவர்களில் ஆவியின் முத்திரையை உண்டாக்கினார்.

**-P '35, 102.**

**ஒத்து வாக்கியங்கள்** :-

ரோம 16:25; கொலோ 2:7; 1பேது 5:10; அப் 10:38; மத் 3:16,17; 1யோவா 2:20,27; 1கொரி 12:12,13; கலா 2:20; 3:16,29; எபே 4:13; 2கொரி 5:5; எபே 1:13,14; 4:30; ரோம 8:9,14-16; 5:5; 2தீமோ 2:19.

**கோபுர வாசிப்பு : Z '14, 213 (R 5498)**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் தேவனின் கிரிகைகளான நிலைநாட்டப்படுதல், அபிஷேகித்தல், முத்திரித்தல் ஆகியவற்றின் அனுபவத்தைப் பெற்றேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? அது நிறைவேற்றியது என்ன?